கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.

கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்

தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 142 | 27-11-2025 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 142 | 27-11-2025 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# தமிழக ஆளுநர் ஆர் என் ரவியின் ஆணவம் அடக்கப்படும். ஈரோடு அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை...

## திட்டப் பணிகளை துவக்கி வைத்தும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்..







ஈரோடு. ந, வ. 27

ஈரோடு மாவட்டத்தில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்ட தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் பல்வேறு திட்டப் பணிகளை துவக்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியம் விழா பேருரை ஆற்றினார். அப்பொழுது தமிழக ஆளுநர் ஆர் என் ரவியின் ஆணவம் விரைவில் அடக்கப்படும் என்று சூளுரைத்தார்.

கடந்த நவம்பர் 25ஆம் தேதி கோவை வந்த தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அங்கு செம்மொழி பூங்காவை திறந்து, தொழில் துறை சார்பில் தொழில் நிறுவனங்களில் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு புதிய தொழில் ஒப்பந்தங்களை ஏற்படுத்தினார்.

அதைத் தொடர்ந்து அங்கிருந்து ஈரோட்டிற்கு வருகை புரிந்த அவருக்கு ஈரோடு மாவட்ட திமுக சார்பிலும், இளைஞரணி சார்பிலும் சிறப்பான வரவேற்பு விஜயமங்கலம் சுங்க சாவடி அருகே அளிக்கப்பட்டது. பின்னர் அவர் ஈரோடு காளிங்கராயன் இல்லத்தில் இரவு ஓய்வெடுத்தார்.

நேற்று காலை நவம்பர் 26ம் தேதி 9 மணி அளவில் மொடக்குறிச்சி வட்டம் அரச்சலூர் வடுகப்பட்டி அருகே உள்ள ஜெயராம புரத்தில் 4.90 லட்சம் ரூபாய் கட்டப்பட்டிருந்த சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் திருஉருவ சிலையுடன் அமைக்கப்பட்ட நினைவு அரங்கத்தினை திறந்து வைத்தார். பின்னர் அரை கிலோ ஓடா நிலையில் அமைந்துள்ள இந்திய சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் மணி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை. பின்னர் அந்த மணி மண்டப வளாகத்தில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் தீரன் சின்னமலையின் குதிரை வீரன் போன்று அமைக்கப்பட இருக்கும் திருஉருவ சிலைக்கு ஆடிக்கல் நாட்டினார்.

பின்னர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அவர் காலை 11:30 மணியளவில் சோலார் புதிய பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டு இருந்த விழா மேடைக்கு வந்தார். அங்கு பல்வேறு முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைத்தும். ஆறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு ஆடிக்கல் நாட்டில் விழா பேருரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது..

இன்றைய தினமும் தமிழ்நாட்டில் இன்றைய நவீன தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு அடித்தளமான தந்தை பெரியாரைத் தந்த இந்த ஈரோட்டிற்கு திராவிட இயக்கத்தின் முதன்மை தொண்டனான நான் பெருமையோடு இங்கே வந்திருக்கின்றேன்.

ஈரோடு பூகம்பம் தந்தை பெரியார் இல்லை என்றால் திராவிட இயக்கம் இல்லை. பேரறிஞர் அண்ணா இல்லை. முத்தமிழர் கலைஞர் இல்லை. ஏன் தமிழ்நாட்டிற்கு இந்த அளவிற்கு வளர்ச்சியும் இருந்திருக்காது.

இந்த ஈரோட்டை பற்றி சொல்ல வேண்டும் என்றால் இது மஞ்சள் நகரம், சந்தன நகரம், தொழில் நகரம், ஜவுளி நகரம், இயற்கை நகரம், விடுதலை வீரர்களை தந்த நகரம் எத்தகைய பெருமைமிகு ஈரோட்டில் இந்த அரசு விழாவில் சிறப்பாக, மிகுந்த சிறப்போடு விழாவை ஏற்பாடு செய்திருக்கிற நம்முடைய கழகத்திற்கு கிடைத்த நல்ல முத்து மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி, அமைதியானவர் அடக்கமானவர் அதே நேரத்தில் ஒரு வேலையை சிறப்பாக செய்து முடிப்பதில்.

இரண்டே வரிகளில் சொல்லவேண்டுமென்றால், அனுபவத்தால் மூத்தவர், உழைப்பினால் இளைஞர்.

நிகழ்ச்சியை மாபெரும் மாபெரும் மானத்தை போல ஏற்பாடு செய்திருக்கின்ற அவருக்கும் அவருக்கு அவருக்கு துணை நிற்கும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ். கந்தசாமி அவர்களுக்கும் அதுபோல மாவட்டத்தின் உள்ள அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள.

இந்த மோதிரம் விழாவில் இந்த மாபெரும் விழாவில் 91 கோடியை 9 லட்சம் ரூபாய் மதிப்பிலான 23 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டில் 235 கோடியே 73 லட்ச ரூபாய் மதிப்பிலான 790 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ஒரு லட்சத்தி 84 ஆயிரத்து 491 பேருக்கு, ரூபாய் 2578 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்குவதும் என்று, 605 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்களை மக்களுக்கு அர்ப்பணிக்கும் வாய்ப்பு இன்றைக்கு எனக்கு கிடைத்துள்ளது.

இந்த விழாவில் கலந்து கொள்ள என்னிடம் தேதி கேட்டபோது கடந்த ஆண்டு மார்ச் மற்றும் டிசம்பர் மாதங்களில் பொள்ளாச்சி மற்றும் ஈரோட்டில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் நான் அறிவித்த 12 அறிவிப்புகளில் நிலைபாடு நிலை என்னவென்று கேட்டேன். அதிகாரிகள் என்னிடம் பகிர்ந்து கொண்ட விவரங்கள் அறிவிப்புகள் எல்லாம் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டிற்கு வந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக ஈரோடு மாநகராட்சியில், 106.78 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலை அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தேன். அதில் 79 புள்ளி 83 கிலோமீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டு மீதம் உள்ள பணிகள் நடைபெற்று வருகிறது இந்த பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதம் பத்தாம் தேதிக்குள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட.

பொறுத்த வரைக்கும் என்னை பொறுத்தவரைக்கும் இந்த விழாவுக்கு வந்தோம் அறிவித்தோம் என்று. அத்தனை அறிவிப்புகளையும் செயல்படுத்தி காட்டக்கூடிய அரசு தான் நம்முடைய திராவிட மாடல்.

கடந்த நான்கு ஆண்டு காலத்தில் ஈரோடு மாவட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் செய்து தரப்பட்டுள்ள திட்டங்களை சொல்வதாக இருந்தால் அதற்குரிய மூன்று மணி நேரம் ஆகும், தலைப்புச் செய்தியாக சிலவற்றை மட்டும் உங்களுக்கு.

ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தை திறந்து வைத்து. ஜெயராமபுரத்தில் மாவீரன் கொல்லான் அவர்களுக்கு முழு தெருவுருவ சேலையுடன் அரங்கம் அமைத்து அதை திறந்து வைத்துவிட்டு இங்கு வந்துள்ளேன்.

ஈரோடு வட்டம் கங்காபுரம் கிராமத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. குரங்குலமும் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மூலம் ஈரோட்டில் மஞ்சள் பொது வசதி மையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

அரசு சுகாதார நிலையங்களில் இதுவரை 8 கோடி 13 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு. கலைஞர் நகர் பெற கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 195 உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 1 77 பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு. கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மீதமுள்ள 18 பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஈரோடு கோபிசெட்டிபாளையம் சத்தியமங்கலம் மற்றும் பெருந்துறை ஆகிய நான்கு இடங்களில் அறிவு சார்ந்த மையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு திட்டங்களின் கீழ் கடந்த நான்கரை ஆண்டுகளில் 944 கிலோமீட்டர் நீளமுள்ள சாலை பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு.

17 ஊரகப் பாலங்கள், 73 நெடுஞ்சாலை பாலங்கள் அமைக்கப்பட்டு. ஈரோடு மண்டலத்தில் நானூறு திருக்கோயில்களில், 154 பணிகள் நடைபெற்று. 850 திருக்கோயில்களில் 150 திருக்கோவில்களில் 218 பணிகள் முடிக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த காலத்தில் நான்கரை ஆண்டு காலத்தில் 133 திருக்கோவில்களுக்கு குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டு. சத்தியமங்கலம் கோபால் குளிர் ஏற்றும் நிலைய வளாகத்தில், கத்து ஊறுகாய்புல் தயாரிக்கும் அளவு அமைக்கப்பட்டு. கரட்டுபாளையத்தில் விடுதியுடன் கூடிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் எட்டு மணி நிறைவுற்று துவங்க. நம்முடைய திராவிட மாடல் அரசி நம்முடைய திராவிட மாடல் அரசின் இத்தகைய முத்திரை திட்டங்களா இந்த ஈரோடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை பேர் பயன் அடைந்து உள்ளார்கள் என்பது தெரியுமா, நான் பெருமையோடு சொல்கிறேன் 4,9, 3 54 குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை. விடுபட்ட மீதமுள்ளவர்களுக்கும்.

வரும் டிசம்பர் 15 ஆம் தேதிக்குள் அதுவும் வழங்கப்பட. நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். 59 ஆயிரத்து 2562 நபர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டு. 51 ஆயிரத்து 70 சுய உதவி குழுக்களுக்கும், மூன்று ஆயிரத்தி எரநூத்தி மூணு கோடி ரூபாய்க்கு கடன் உதவி வழங்கப்பட்டு. மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் 8 லட்சத்தி 65 ஆயிரம் பேர் பயனடைந்து உள்ளனர். என்னுயிர் காப்போம், 48 திட்டத்தின் 9 ஆயிரத்து 2562 பேரும், உயிர்கள். 5 ஆயிரத்து 865 பெண்கள். திருமண உதவி பெற்றுள்ளார்கள். 12, 819 குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டு இருக்கிறது. ஊட்டச்சத்தை உறுதி செய்யும் திட்டத்தின் 12, 819 தாய்மார்கள்.

காலை உணவு திட்டத்தால் 53 ஆயிரத்து 716 மாணவர்கள் பசி இல்லாமல். புதுமைப்பெண் திட்டத்தில் 48 ஆயிரத்தி 1801 மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உயர்கல்வி உதவித்தொகை கிடைக்கிறது.

57 ஆயிரத்து 763 மாணவ மாணவிகளுக்கு மிதுவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்திற்கு மேலும் 5 புதிய திட்ட அறிவிப்புகளை வெளியிட்டு பேசிய முதல்வர்.. புஞ்சை புளியம்பட்டி நகராட்சிக்கு நாலு கோடியே 3 0 லட்சம் ரூபாய் செலவில், கோபிசெட்டி பாளையம் நகராட்சிக்கு நான்கு கோடி 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்கள் கட்டவும்.

பவானிசாகர் மற்றும் கீழ் பவானி நீர் பாசன திட்டத்தின் கீழ் திட்ட நிபந்தனையுடன் வழங்கப்பட்ட பட்டாக்களை நிரந்தர பட்டாவாக மாற்ற வேண்டும் என்ற சத்தியமங்கலம் நம்பியூர் பவானி கோபிசெட்டிபாளையம் மொடக்குறிச்சி கொடுமுடி பெருந்துறை மற்றும் ஈரோடு ஆகிய வட்டங்களை சேர்ந்த விவசாயிகளை கோரிக்கைகளை ஏற்று இந்த 90 கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளின் பட்டாக்கள் நிரந்தர பட்டாவாக மாற்றப்படும்.

அந்தியூர் அருகே உள்ள தோனி மடுவு பள்ளத்தில் குறுக்கே நான்கு கோடி ரூபாய் செலவில் புதிய திருப்பணை.

முக்கியமாக சாயப்பட்டறை கழிவுகளால் பாதிக்கப்பட்ட நொய்யல் ஆற்று பாசன விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக உள்ள பல்வேறு வழக்குகள் மற்றும் சட்ட சிக்கல்களை தீர்ப்பது குறித்து ஆராய வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும்.

பெருந்துறையில் தற்போது உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 5 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டித் தரப்படும்.

என்ன மங்கலம் வருவாய் கிராமங்களில் உள்ள நிலங்களுக்கான பதிவேடுகளில் உள்ள நிபந்தனை பட்டாக்கள் அயன் பட்டாக்களாக மாற்றப்படும்.

இப்படி நாம் தெரிந்தவரும் இவ்வாறு நாம் தினந்தோறும் தொடர் திட்டங்களை செயல்படுத்தி வருவதால் தான் எதிர்க்கட்சிகள் என்ன சொல்வது என்று தெரியாமல் விரக்தியில் பெருமை பிடித்தவர்களாக இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஈரோட்டில் நான் பேசும் பொழுது, நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டதோடு தமிழ்நாட்டின் வெண்மை புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை பரமசிவம் ஐயா

[தொடர்ச்சி 3ம்பக்கம்....]



# தமுமுகவின் 218வது ஆம்புலன்ஸ் அர்ப்பணிப்பு விழா



திருவண்ணாமலை நவ 27

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம் திருவண்ணாமலை மாநகர தமுமுக சார்பாக அனைத்து சமுதாய மக்களுக்காக ஆம்புலன்ஸ் அர்ப்பணிப்பு மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட தலைவர் ஏ.ஆர் நாசர் உசேன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனிதநேய மக்கள் கட்சி பொதுச்செயலாளரும் தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர் ப.அப்துல் சமது விலிகி அனைத்து சமுதாய மக்களுக்காக ஆம்புலன்ஸ் அர்ப்பணித்து உரை நிகழ்த்தினார்.

தமுமு மாநில செயலாளர் ஏஜாஸ் அஹ்மத் தலைமை பிரதிநிதி அச்சரபாக்கம் ஷாஜகான்

மருத்துவ சேவை அணி மாநில செயலாளர் கலீல் ரகுமான் ,ஐபிபி மாநில துணைச்செயலாளர் திருப்பத்தூர் சி.ரி.சனாவுல்லாஹ், கோவை செய்யது ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் மாநில மாவட்ட நிர்வாகிகள் துணை நிர்வாகிகள் நகர் நிர்வாகிகள் கிளை நிர்வாகிகள் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# திருவள்ளூரில் ரூ.3.01 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சாலை விழிப்புணர்வு மற்றும் அறிவியல் பூங்கா, முதல்வர் படிப்பகம் : அமைச்சர் சா.மு.நாசர் பார்வையிட்டார்



திருவள்ளூர் நவ 27 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் பொதுப்பணித் துறை இணைந்து சமூக பங்களிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.3.01 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சாலை விழிப்புணர்வு மற்றும் அறிவியல் பூங்காவினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் பார்வையிட்டு மின்கல இரயில் உறுதியில் மாணவர்களுடன் பயணம் மேற்கொண்டார் .

தொடர்ந்து சமூக பங்களிப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட முதல்வர் படிப்பக கல்வெட்டை திறந்து வைத்து போட்டி தேர்வுகளுக்கு பயில வந்த மாணவர்களுடன் கலந்துரையாடினார். பின்பு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் கருணை அடிப்படையில் 10 நபர்களுக்கு அலுவலக உதவியாளர் மற்றும் 13 நபர்கள் கிராம உதவியாளர் பணி நியமன ஆணைகளை அமைச்சர் வழங்கி பேசினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பூங்காவை மிகக் குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் வடிவமைத்து அந்த வடிவு அமைப்பின் இந்த பூங்காவில் அறிவியல் மற்றும் சாலை பாது காப்பு விழிப்புணர்வு மற்றும் முதல்வரின் படிப்பகம் என்ற தலைப்பில் தொடங்கப் பட்டிருக்கிறது மாணவச் செல்வங்கள் வருங் காலங்களில் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக,அறிவியல் சார்ந்த அதேபோன்று ஒன்று கூடி போட்டி தேர்வுகளில் படிப்பதற்கான வசதிகள் வடிவமைப்பை மாவட்ட ஆட்சியர் வடிவமைத் துள்ளார்.

திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் தொடங்கி வைத்தோம் மாணவச் செல்வங்கள் பயன்பாட்டிற்காக நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. பூங்கா அமைப்பதற்கு ரூ.5 கோடி மதிப்பீட்டில் சிறப்பான முறையில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது அமைச்சர் சா.மு.நாசர் கூறினார்.

இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயகுமர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தேவன். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.வெங்கட்ராமன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சேலம் இல்லனா என்ன,ரூட்டை மாற்றிய விஜய்.

# தளபதி போட்ட பக்கா ஸ்கெட்ச். தொண்டர்களுக்கு சூப்பர் குட் நியூஸ்.



சேலம், நவ. 27–

நடிகர் விஜய் தீவிர அரசியல் நடவடிக்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ள நிலையில் தமிழக அரசியல் களம் ஒவ்வொரு நொடியும் பரபரப்பாகவே செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை தமிழகத்தில் உள்ள மாவட்டங்களுக்குச் சென்று விஜய் மக்களை சந்தித்து வந்தார். அப்படி செல்லும் வழிகளில் அவரே எதிர்பார்க்க வில்லை என்றாலும் அது ரோடு ஷோ போல தான் நடந்தது. அவர் வாகனத்தின் உள்ளே அமர்ந்திருந்தும் அவரைக் காண வழி முழுவதும் பொதுமக்களும், ரசிகர்கள் மற்றும் தமிழக வெற்றிக்கழகம் தொண்டர்கள் குவிந்தனர். அதிலும் பலபேர் இருசக்கர வாகனங்களிலும் கார்களிலும் விஜயின் வாகனத்திற்கு பின்னும் முன்னும் அவரை பின்தொடர்ந்தனர்.

இதனால் அவர் நாமக்கல்லில் இருந்து கரூருக்கு செல்ல பழமொழி நேரம் தாமதம் ஆனதால் அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 41 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த விவகாரம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில் தற்போது விஜய் அதனை சட்டரீதியாக கையாண்டு வருகின்றார். இதனைத் தொடர்ந்து வருகின்ற டிசம்பர் 5ஆம் தேதி முதல் மீண்டும் தனது சுற்றுப்பயணத்தை தொடங்க விஜய் திட்டமிட்டுள்ளார். இதற்காக சேலத்தில் அனுமதி கேட்டு தமிழக வெற்றி கழகம் சார்பில் காவல் நிலையத்தில் மனு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் சில காரணங்களைச் சொல்லி போலீசார் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இதனால் தேதி மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திடீர் திருப்பமாக அதே டிசம்பர் 5ஆம் தேதி புதுச்சேரியில் ரோடு ஷோ நடத்துவதற்கு விஜய் திட்டமிட்டுள்ளாராம். இதற்காக புதுச்சேரி காவல்துறையிடம் தமிழக காவல்துறை சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி காலாபட்டில் தொடங்கி கன்னிய கோவில் பகுதி வரை ரோடு ஷோ நடக்கும் என்று கூறப்படுகிறது. மேலும் உப்பளத்தில் விஜய் பேசுவார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. டிசம்பர் 5ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை விஜய் ரோடு ஷோ நடத்த போலீசாரிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது.

# கள்ளக்குறிச்சி மாவட்டம் உதயமான தினம்.

கள்ளக்குறிச்சி, நவ. 27–

கள்ளக்குறிச்சி மாவட்டம் (Kallakurichi district) தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் ஒன்றாகும். இம்மாவட்டத்தின் நிர்வாகத் தலைமையிடம் கள்ளக்குறிச்சி ஆகும்.

தற்போதைய விழுப்புரம் மாவட்டத்தின் தெற்குமேற்குப் பகுதிகளைக் கொண்டு, தமிழ்நாட்டின் 34ஆவது மாவட்டமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் 08 ஜனவரி 2019ல் புதிதாக உருவாக்கப்பட்டது. இம்மாவட்டத்தின் தலைமையிடம் கள்ளக்குறிச்சி நகரம் ஆகும்.

இந்த புதிய மாவட்டத்தை 26 நவம்பர் 2019ல் அப்போதைய தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே.பழனிச்சாமி முறைப்படி கள்ளக்குறிச்சியில் துவக்கி வைத்தார்.

# தென்காசி பேருந்து விபத்தில் தாயை இழந்த பெண்ணுக்கு அரசுப் பணி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு..!!

சென்னை: நவ.27–

தென்காசி பேருந்து விபத்தில் தாயை இழந்த பெண்ணுக்கு அரசுப் பணி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். பார்வை மாற்றுத்திறனாளி கீர்த்திகாவுடன் முதல்வர் தொலைபேசியில் பேசி ஆறுதல் கூறினார். புளியங்குடி நகராட்சி அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி பணி பார்வை மாற்றுத்திறனாளி கீர்த்திகாவுக்கு தரப்பட்டுள்ளது. அண்மையில் தென்காசி அருகே நடந்த பேருந்து விபத்தில் கீர்த்திகாவின் தாய் மல்லிகா உயிரிழந்தார். சிறு வயதில் தந்தையை இழந்த நிலையில் தாயும் விபத்தில் உயிரிழந்ததால் கீர்த்திகாவுக்கு அரசு உதவிக்கரம் நீட்டியுள்ளது.

# புதுச்சேரி முதலமைச்சரிடம் ஆசி பெற்றார் ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் மாநில துணைத்தலைவர் மருதமலையார்!

## தாயின் திருவுருவச் சிலையை திறந்து வைக்க முதலமைச்சருக்கு நேரில் அழைப்பு





புதுச்சேரி: நவ.,27–

ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் தமிழ்நாடு மாநில துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மருதமலையார் (எ) மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு அவர்கள், புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்களைச் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து ஆசி பெற்றார். மேலும் அப்பாபைத்திய சுவாமி கோயிலில் சிறப்பு வழிபாடு செய்தார்.

ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் முக்கியப் பொறுப்பான, தமிழ்நாடு மாநில துணைத்தலைவர் பதவி தனக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து, முதலமைச்சரைச் சந்தித்த மருதமலையார், அவரிடம் பூங்கொத்து வழங்கி வாழ்த்து மற்றும் ஆசி பெற்றார். இச்சந்திப்பின் போது, தனது தாயாரின் திருவுருவச் சிலையை திறந்து வைப்பதற்கான விழாவிற்கு வருகை தந்து, சிலையைத் திறந்து வைக்குமாறு முதலமைச்சர் ரங்கசாமி அவர்களுக்கு மருதமலையார் அன்பு அழைப்பு விடுத்தார்.

முதலமைச்சருடனான சந்திப்பைத் தொடர்ந்து, புதுச்சேரி பொதுப்பணித்துறை அமைச்சர் க. லட்சுமி நாராயணன் அவர்களை மருதமலையார் நேரில் சந்தித்தார். அப்போது தனது புதிய பதவி குறித்துத் தெரிவித்து அவரிடம் வாழ்த்துக்களைப் பெற்றார். மேலும், புதுச்சேரி அமைச்சர் ஜான் குமார் அவர்களையும் நேரில் சந்தித்து, தனது புதிய பொறுப்பிற்காக வாழ்த்துக்களை பெற்றார்.

இந்தச் சந்திப்புகளின் போது லோகேஷ் அபிமன்யுடன் மற்றும் ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# சேலம், கருமந்துறை மலைக் கிராமங்களில் 9 நாட்டுத் துப்பாக்கிகள் பறிமுதல்.




ஆத்தூர்: நவ.27–

சேலம் மாவட்டம்,கருமந்துறை மலைக் கிராமங்களில் சட்ட விரோதமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 9 நாட்டுத் துப்பாக்கிகளை சேலம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சோமசுந்தரம் பறிமுதல் செய்தார்.

பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், கரியகோயில் கிராங்காடு கிராமத்தில் நிகழ்ந்த கொலை சம்பவம் தொடர்பாக தனிப்படை போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், காவல் கண்காணிப்பாளர் கௌதம் கோயல் உத்தரவின்பேரில் கூடுதல் கண்காணிப்பாளர் சோமசுந்தரம், ஆத்தூர் துணைக் கண்காணிப்பாளர் சத்யராஜ், வாழப்பாடி துணை கண்காணிப்பாளர் சுரேஷ், ஆய்வாளர்கள் சண்முகம் (தம்மம்பட்டி), கமலக்கண்ணன் (கருமந்துறை) ஆகியோர் கொண்ட தனிப்படையினர் மலைக் கிராமங்களில் சட்ட விரோதமாக பதுக்கிவைக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகள் குறித்து சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையில் 9 நாட்டுத் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுதொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், யாரேனும் சட்ட விரோதமாக துப்பாக்கிகளை பதுக்கிவைத்திருந்தால் காவல் நிலையத்தில் ஒப்படைக்குமாறு தனிப்படை போலீஸார் தெரிவித்துள்ளனர்.

# பள்ளி மாணவர்களை வைத்து மதுபாட்டில் கடத்திய வாலிபர் கைது

விழுப்புரம் : நவ.27–

தமிழக எல்லையான விழுப்புரம் மாவட்டம் வழியாக புதுச்சேரியில் இருந்து மதுபாட்டில், சாராயம் கடத்திச் செல்வதை தடுக்கும் வகையில் மதுவிலக்கு சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டும், நடமாடும் மதுவிலக்கு போலீசார் தமிழக எல்லை பகுதியில் வரும் சாலைகளில் வாகன சோதனையில் ஈடுபட்டு மது கடத்தலை தடுத்து வருகின்றனர். கடத்தலில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் விழுப்புரம் அடுத்த கெங்கராயபாளையம் சோதனை சாவடியில் நேற்று மதுவிலக்கு அமலாக்க பிரிவு போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அதிவேகமாக இரு சக்கர வாகனத்தில் குழந்தைகளை பள்ளி சீருடைகளுடன் அமர வைத்துக்கொண்டு வாலிபர் பைக்கை அதிவேகமாக ஓட்டி வந்தார்.

சந்தேகத்தின்பேரில் போலீசார் பைக்கை நிறுத்தி சோதனை மேற்கொண்டபோது அதில் 180 மில்லி அளவு கொண்ட 124 மதுபாட்டில்களும், 90 மில்லி அளவு கொண்ட 192 என மொத்தம் 316 மதுபாட்டில்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து நடத்திய விசாரணையில் விழுப்புரம் நந்தனார் தெருவை சேர்ந்த பர்வீன்(30) என்பதும், புதுச்சேரியில் குறைந்த விலைக்கு மதுபாட்டில்களை வாங்கிக் கொண்டு விற்பனைக்காக கடத்தி வந்தது தெரியவந்தது. மேலும் போலீசாருக்கு சந்தேகம் ஏற்படாமல் இருக்க அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக பள்ளி சீருடையில் குழந்தைகளை உட்கார வைத்துக்கொண்டு மதுபாட்டில்கள் கடத்தி வந்தது தெரியவந்தது. இதனை தொடர்ந்து போலீசார் அவரை கைது செய்தனர். கைது செய்யப் பட்ட அவரிடம் இருந்து மதுபாட்டில்கள்,பைக் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட பர்வின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டார்.

# காங்கிரஸ் கட்சியில் அனைத்து மாவட்டங்களிலும் தலைவர்கள் மாற்றம்...!




தஞ்சாவூர் நவ.27

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் அமைப்பு மறு சீரமைப்பு இயக்க கூட்டம் தஞ் சாவூர் பரிசுத்தம் ஹோட்டல் அரங்கில் நடைபெற்றது.

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன்கார்கே. ராகுல் காந்தி. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வ பெருந்தகை. இவர்கள் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைவர்கள் மாற்றம் செய்யப்பட உள்ளனர். அதன் அடிப்படையில் தஞ்சை மாநகர மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள மேலிட பொறுப்பாளர் நரேஷ் குமார். பி.ஜி ராஜேந்திரன் தலைமையில் புதிய மாவட்ட தலைவர்களை தேர்வு செய்வதற்கான படிவங்களை வழங்கினார். தஞ்சை மாநகர மாவட்ட துணைத் தலைவர் லட்சுமி நாராயணன். தஞ் சாவூர் மாநகர மாவட்ட உறுப்பினர் சேர்க்கை பொறுப்பாளர் செந்தில்சிவகுமார், ஜான்சன். மாநகர மாவட்ட துணை தலைவர் ஞானசீலன். மாநகர மாவட்ட பொருளாளர் பழனியப்பன். இளைஞர் காங்கிரஸ் தலைவி சௌபாக்கியா. மாவட்ட பொதுச் செயலாளர் இயேசு. கரந்தை கண்ணன். வடிவேலு கோட்டத் தலைவர் மகேந்திரன் வர்த்தக பிரிவு சந்திரசேகர். கலைப் பிரிவு இருதயம் முன்னாள் இளைஞர் காங்கிரஸ் மாநில செயலாளர் யூனுஸ். முன்னாள் இளைஞர் காங்கிரஸ் முகேஷ் குமார். எஸ் சி எஸ்டி பிரிவு சுந்தர். முன்னாள் மாமன்ற உறுப்பினர் சாந்தார ராமதாஸ். மும்தாஜ் போகம். மற்றும் காங் கிரஸ் கட்சி தலைவர்கள் தொண்டர்கள் ஏராள மாக கலந்து கொண்டனர்.

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் "அன்புச்சோலை திட்டம்" மூலம் பயனடைந்த பொதுமக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நிறைந்த மனதுடன் தங்களது நன்றியை தெரிவித்தனர்






தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைதீட்டி செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக உங்கள் தொகுதியில் முதலமைச்சர், இல்லம் தேடி கல்வி திட்டம், நான் முதல்வன் திட்டம், இன்னுயிர் காக்கும் நம்மைக் காக்கும் 48, புதுமைப்பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், கள ஆய்வில் முதலமைச்சர் மற்றும் மக்களுடன் முதல்வர், கலைஞரின் கனவு இல்லம் போன்ற பல்வேறு முன்னோடி திட்டங்கள் கடைக்கோடியில் வாழக்கூடிய நபர்களுக்கும் சென்றடையும் வண்ணம் செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் அரசின் அனைத்து நலத்திட்டங்களும் சேவைகளும் தங்கு தடையின்றி விரைந்து மக்களை சென்றடைவதை உறுதி செய்திட வேண்டுமென்ற உன்னத நோக்கத்தின் அடிப்படையில் இவ்வரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு சார்பில் அன்புச்சோலை திட்டத்தை கடந்த 10ஆம் தேதி திருச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதற்காக அரசு ரூ.10 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. திருச்சி, சென்னை, சேலம், தூத்துக்குடி உட்பட தமிழ்நாடு முழுவதும் 25 இடங்களில் இத்திட்டம் அமலுக்கு வந்துள்ளது. ஒவ்வொரு மையத்திலும் அந்தந்த பகுதியில் செயல்படும் தனியார் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச்சோலை மையங்கள் வீதம் 10 மாநகராட்சியில் 20 அன்புச்சோலை மையங்களும் சென்னை பெருநகராட்சியில் 3 மையங்களும் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொட்டப்பட்டில் செயல்படும் அன்புச்சோலை அதன் செயல்பாடுகள் குறித்து பயனடைந்தவர்கள் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அன்புச்சோலை திட்டத்தில் பயனடைந்த முதியோர்கள் தெரிவித்ததாவது:



திருமதி.மீனாட்சி, பொன்மலை பட்டி: வணக்கம், எனது பெயர் மீனாட்சி, எனக்கு வயது 55. எனக்கு கணவர் இல்லை. நான் எம்.ஜி.ஆர் நகர் முதல்தெரு, பொன்மலை பட்டியில் வசித்து வருகிறேன். எனது மகன் மற்றும் மருமகள் என அனைவரும் வேலைக்கு சென்று வரும் நிலையில் நான் மட்டும் வீட்டில் தனியாக உள்ளேன். எனக்கு வீட்டில் தனியாக இருப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. இந்த அன்புச்சோலை நிலையத்தில் சோ;ந்தவுடன் இங்கு நிறைய வசதிகள் உள்ளன. உடற்பயிற்சி, யோகா பயிற்;சி சொல்லி தருகிறார்கள். கேரம்போர்டு, செஸ் விளையாட்டு, நூலகம் மற்றும் டிவி பார்ப்பது என அனைத்து வசதிகளும் உள்ளது. நண்பா;கள் நிறைய போ; எனக்கு கிடைத்துள்ளனா;.காலையில் வந்த உடன் டீ, பிஸ்கெட், மதிய உணவு என உணவு வகைகள் கொடுக்கிறார்கள். காலையில் வந்து மாலை நேரத்தில் செல்கிறோம். இந்த திட்டத்தினை ஏற்படுத்தி வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தையும் மனமார்ந்த நன்றியையும் நிறைந்த மனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு.கண்ணன், கொட்டப்பட்டு: எனது பெயர் கண்ணன், வயது 77. எனது மனைவி இயற்கை எய்தி விட்டார். நான் பொன்மலையிலிருந்து வருகிறேன். இந்த அன்புச்சோலை திட்டத்தை அறிந்துகொண்டேன். எனக்கு ஒரு மகன் மட்டும் உள்ளான். அவனுக்கு திருமணமாகிவிட்டது. மகன் தனியாக வசித்து வருகிறான். என்னை கவனித்து கொள்ள ஆள் இல்லாத நிலையில் இந்த திட்டம் பயனுள்ளதாக உள்ளது. இதில் காலையில் வந்த உடன் சகநண்பா;களுடன் பேசுவதற்கும், பழகுவதற்கும் ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கிறது. இதனால் மனமகிழ்ச்சியுடன் இருப்பதாக உணா;கிறேன். இதில் அன்றாட நிகழ்வுகளை தெரிந்து கொள்வதற்கு ஏற்ப நூலக வசதி, உடற்பயிற்சி மற்றும் டீ, பிஸ்கெட் மதிய வேளை உணவு வசதி என அனைத்து வசதிகளையும் வழங்கி வருகிறாலீர்கள். இந்த வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு.ஜானகிராமன், பொன்மலை பட்டி : எனது பெயர் ஜானகிராமன், வயது 66, நான் பொன்மலை பட்டி பேன்சி நகரில் வசித்து வருகிறேன். எனக்கு யாரும் இல்லை. நான் சிறைத்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அரசு ஊழியா;. இந்த அன்புச்சோலை திட்டத்தை பற்றி தெரிந்து கொண்டேன். எனக்கு இந்த மையத்தை பார்க்கும்போது ஆசையாகவும் பெருமையாகவும் இருக்கிறது. பொழுதுபோக்குவதற்காக கேரம், செஸ், தொலைக்காட்;சி வசதி என பல்வகை அம்சங்கள் உள்ளன. எனக்கு இதனை பார்க்கும்போது பழைய நினைவுகள் ஞாபகத்தில் வருகிறது. இங்கு வழங்கப்படும் உணவுகள் அனைத்தும் தரமாகவும், சூடாகவும், நல்ல ருசியாகவும் கிடைக்கிறது. எங்களை போன்ற மூத்த வயது உடையவா;களுடன் பேசி பழகுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. இங்கு வந்த பிறகு எனக்கு நல்ல மன அமைதியும், நல் உடல் ஆரோக்கியம் பெறுவதையும் உணா;கிறேன். தினமும் ஆனந்தத்துடன் பொழுதை கழிக்கின்றேன். வீட்டிற்கு செல்வதற்கு மனமில்லாமல் இருக்கிறது. இது போன்ற பல நல்ல திட்டங்களை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை நிறைந்த மனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:
**உதவி இயக்குநர்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.



தேசிய பால் தினத்தை முன்னிட்டு சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர்இராஜேந்திரன், அமைச்சர் மனோ தங்கராஜ், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்கான கடனுதவிகளை வழங்கினார்கள். உடன் பால்வளத்துறை ஆணையர்/ மேலாண்மை இயக்குனர் ஜான் லூயிஸ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், சேலம் ஆவின் பொது மேலாளர் குமரேஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.

# கோவை பிரகதி பல்நோக்கு மருத்துவமனையில் ரோபோட்டிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை பிரிவு துவக்கம்



கோவை, நவ:27

புதிய மையத்தை தமிழக செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார், கோவை சித்தாபுதூர் பகுதியில் செயல்பட்டு வரும் பிரகதி பல்நோக்கு மருத்துவமனையில் அனைத்து விதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களை கொண்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது..

விபத்து மற்றும் அவசர சிகிச்சை, தலைக் காயம் ,நரம்பியல்,பொது மருத்துவம், நீரிழிவு நோய்,வயிறு மற்றும் குடல் தொடர்பான நோய்கள், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, இருதவியல், நுரையூரல் தொடர்பான நோய்கள் என அனைத்து விதமான பிரச்னைகளுக்கும் தீர்வு அளிக்க கூடிய தேர்ந்த மருத்துவ நிபுணர்களை கொண்டு பிரகதி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது..

இந்நிலையில் பிரகதி மருத்துவமனைக்கு கூடுதல் சிறப்பு சேர்க்கும் வகையில் மூட்டு மாற்று அறுவை சிகிச்சையில் அதி நவீன தொழில் நுட்பமான ரோபோட்டிக் சிகிச்சை மையம் பிரகதி மருத்துவ மனையில் துவங்கப்பட்டது.

இதற்கான துவக்க விழா மருத்துவ மனையின் நிர்வாக இயக்குனர் மருத்துவர் பாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது..

இதில் சிறப்பு விருந்தினராக தமிழக செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன் கலந்து கொண்டு புதிய ரோபோட்டிக் சிகிச்சை மையத்தை திறந்து வைத்தார்..

இது குறித்து பிரகதி மருத்துவமனையின் தலைவர் மருத்துவர் பாலசுப்ரமணியன் கூறுகையில், ஏற்கனவே பல்துறை சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டு வந்த பிரகதி மருத்துவ மனையில் தற்போது, புதியதாக துவங்கப்பட்டுள்ள ரோபோட்டிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மையம் வாயிலாக மூட்டு மாற்று அறுவை சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சை வழங்குவதோடு,சிகிச்சை பெறுபவர்கள் விரைவில் குணமடைந்து இயல்பு நிலைக்கு திரும்ப முடியும் என அவர் தெரிவித்தார்..

விழாவில் மருத்துவர் வேலுசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்...

# ஆவடி மாநகராட்சியில் பல்வேறு திட்டங்களை பார்வையிட்டு, அரசு பள்ளி மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் : அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்



திருவள்ளூர் நவ 27 : திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பருத்திப்பட்டு பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் ரூ.30.43 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 33/11 கேவி துணை மின்நிலையத்தையும், மிட்டணமல்லி பகுதியில் ரூ.3.3 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட புதிய 16 எம்விஏ மின் மாற்றியையும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் திறந்து வைத்தார்.

தொடர்ந்து கௌரிபேட்டை பகுதியில் சமூக பங்களிப்பு திட்டத்தின் கீழ் ரூ.25.35 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக திறக்கப்பட்ட அங்கன்வாடி மையத்தை அமைச்சர் பார்வையிட்டு இனிப்பு மற்றும் பரிசுகளை வழங்கினார். அதனைத்தொடர்ந்து, காமராஜ் நகர் பகுதியில் ஆவடி அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் முதல் கட்டமாக 11ஆம் வகுப்பு பயிலும் 475 மாணவியர்களுக்கு ரூ.22,61,000 மதிப்பில் விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் சா.மு.நாசர் வழங்கி பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பு கல்வியாண்டில் (2025 26)கீழ் 7237 மாணவர்கள் மற்றும் 9877 மாணவியர்கள் என மொத்தம் 17114 மிதிவண்டிகள் ரூ.824.76 லட்சம் மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கப்பட உள்ளது.மேலும், புதிய பருத்திப்பட்டு 33/11 சேவி துணை மின் நிலையம் திறந்து வைக்கப்பட்டது. அதிநவீன துணைமின் நிலையம் திருவேற்காடு மற்றும் ஆவடி 110 கேவி துணை மின் நிலையங்களிலிருந்து இரண்டு 33 கேவி ஃபீடர்கள் வழியே மின்சாரம் பெறுகிறது. இது இப்பகுதிக்கு நம்பகமான மற்றும் தங்கு தடையற்ற மின்சார விநியோகத்தை உறுதி செய்கிறது. இந்த திட்டம் ரூ.30.43 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மிட்டணமல்லி, முத்தா புதுப்பேட்டை, பட்டாபிராம் மிலிட்டரி சைடிங் பகுதி, பாரதி நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள 30,000க்கும் மேற்பட்ட நுகர்வோர் இந்த மேம்பாட்டினால் பயனடைவர் என அமைச்சர் கூறினார்.

இதில் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரைசந்திரசேகர்,ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, தலைமை பொறியாளர் சென்னை வடக்கு மண்டலம் மாலதி ஸ்ரீ, ஆவடி செயற்பொறியாளர் நரசிம்மன், உதவி செயற்பொறியாளர் பட்டாபிராம் கார்த்திகணேஷ், மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் நல அலுவலர் லலிதா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் சொ. கற்பகம், பொன்னேரி மாவட்ட கல்வி அலுவலர் கே.ரவி, பள்ளி தலைமையாசிரியர் சு.பிரேமா, ஆசிரியர்கள் மற்றும் திரளான மாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் மாட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி முன்னிலையில் சேலம் கோட்டை, அருள்மிகு அழகிரிநாத சுவாமி திருக்கோயிலில் மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்தல் விழா நடைபெற்றது. உடன் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் சபர்மதி, உதவி ஆணையர் ராஜா ஆகியோர் உள்ளனர்.

# தமிழக ஆளுநர் ஆர் என் ரவியின்,,, (முதல்பக்கத் தொடர்ச்சி)

ஈரோடு பால்பண்ணையில் நிறுவப்படும் என்று அறிவித்தேன். விவசாய குடும்பங்களின் வருவாயை ஏற்க பால் விநியோக முறையை நவீனப்படுத்த அர்ப்பணிப்புடன்.. பாடுபட்டவர் அவர்.

தன்னைஒருமேற்குமண்டலத்துக்காரர் என்று சொல்லிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி இந்த மண்டலத்திற்கு இதுபோன்ற செயல்களை செய்து. உள்ளாரா என்று நான். கேட்கவில்லை. காரணம் அவர் செய்தது பூரம் துரோகம் தான். பச்சைத்துண்டை அணிந்து கொண்டு தமிழ்நாடு விவசாயிகளுக்கு பழனிசாமி அவர்கள் பச்சை துரோகம் செய்கிறார்.

மேலும்தமிழ்நாட்டுவிவசாயிகளுக்காக பிரதமரை சந்திக்க செல்வதாக எடப்பாடி பழனிச்சாமி சொன்னால் அவருக்காக குளு குளு வசதி கொண்ட வேர்க்காத கார் ஒன்றை ஏற்பாடு செய்து தருகிறேன். முகத்தில் துணி மூடிக் கொண்டு சென்று பார்ப்பதெல்லாம் வெறும் வெளி வேஷம்.

அதேபோல் மதுரை கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு உரிய அனுமதியை வழங்காமல் அந்த மாநகர மக்களுக்கு துரோகம். இளைத்துள்ளது.

அதை நேரம் கோவை பாஜக எம்எல்ஏ ஒருவர் பாஜகவிற்கு தமிழக மக்கள் வாக்களிக்கவில்லை என்ற ஒரு காரணத்திற்காக அந்த மக்களுக்கு எந்த நலத்திட்டமும் மத்திய அரசு செய்யாது என்று வெளிப்படையாக ஒப்புதல் வாக்குமூலம். தந்துள்ளார்.

அதே நேரம் பாஜகவின் கைக்கூலியாக செயல்படும் நபர் ஒருவர் தமிழ்நாட்டில் உள்ளார் அவர்தான் தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர் என் ரவி. வட மாநிலங்களில் பல்வேறு தீவிரவாத தாக்குதல் நடந்த போது தமிழ்நாட்டிலிருந்து நிதி வழங்கி. உள்ளோம்.

அதே நேரம் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யும் பாஜகவின் எடுபுடியாக இருந்து கொண்டு தமிழக மக்களையும் தமிழ் மொழியையும் இணைவாக பேசும் ஆளுநர் ஆர் என் ரவியின் ஆணவம் அடக்கப்படும். தேசப்பற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தமிழகத்தை தீவிரவாதத்தை ஆதரிப்பதாக ஆறென்றவை ஆணவத்தோடு பேசி உள்ளார் அவருடைய ஆணவம் விரைவில். அடக்கப்படும்.

தமிழக மக்கள் ஆங்கிலம் பேசுவது யார் என்றைக்கு. எங்களுக்கு தேவை என்ற முறையில் ஆங்கிலத்தை நாங்கள் இன்னும் எங்கள் பிள்ளைகள் ஆர்வத்துடன் ஆங்கிலத்தில் படிப்பார்கள். இதில் ஆர் என் ரவிக்கு என்ன வந்தது. அதில் அவருக்கு என்ன எரிச்சல் உள்ளது.

வரும் 2026 சட்டமன்ற பொது தேர்தலில் உங்கள் அனைவரின் பேராதரவோடு 2.0 திராவிட மாடல் ஆட்சி மீண்டும் தமிழகத்தில் மலரும்.

இவ்வாறு ஈரோட்டில் நடந்த அரசு விழாவில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் சு. முத்துசாமி, கே என் நேரு, ஏ வா வேலு, வெள்ளகோவில் சாமிநாதன், கயல்விழி செல்வராஜ், எம்பிக்கள் அந்தியூர் செல்வராஜ், திருப்பூர் சுப்புராயன், ஈரோடு கே இ பிரகாஷ், எம் எல் ஏக்கள் வி சி சந்திரகுமார், அந்தியூர் வெங்கடாசலம், ஈரோடு மேயர் நாகரத்தினம், துணை மேயர் செல்வராஜ், வடக்கு ஒன்றிய செயலாளர் என் நல்லசிவம், மத்திய மாவட்ட பொறுப்பாளர் தோப்பு என்டி வெங்கடாசலம், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ. திருவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார் செங்கோட்டையன்!



சென்னை: நவ.27–

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன், எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். அதிமுகவில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், தவெகவில் இணைவதாக தகவல்கள் வெளியான நிலையில் இதுகுறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், அவரது ஆதரவாளர்களுடன் நாளை தவெகவில் இணைய உள்ளதாக கடந்த 2 நாட்களாக தகவல் பரவியது. அதைத்தொடர்ந்து நேற்று காலை முதல் அவரது வீட்டின் முன்புற கதவுகள் பூட்டப்பட்டு, பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப் படவில்லை. மாலையில் முன்னாள் எம்பி சத்தியபாமா உள்ளிட்ட ஆதரவாளர்கள் வீட்டிற்கு வரவழைக்கப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து மாலை வீட்டில் இருந்து சென்னை செல்வதற்காக காரில் விமான நிலையத்துக்கு புறப்பட்டார். அப்போது, தவெகவில் இணைகிறீர்களா என நிருபர்கள் கேட்டபோது, அதை மறுக்காமல் சிரித்தவாறு சென்றார். உங்கள் மவுனம் சம்மதம் என்று எடுத்துக் கொள்ளலாமா.? என்று மீண்டும் கேட்டபோது அப்போதும் பதில் ஏதும் சொல்லவில்லை. இதை தொடர்ந்து கோவை பீளமேடு விமான நிலையத்தில் செங்கோட்டையன் நிருபர்களிடம் கூறுகையில், ''அதிமுக எனும் இயக்கத்திற்காக 50 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் ஏற்றத்தாழ்வு களை சந்தித்து, உழைத்த எனக்கு கொடுத்திருக்கக் கூடிய பரிசு உறுப்பினராக கூட இருக்கக் கூடாது என்று முறையில் நீக்கப்பட்டு இருக்கிறேன்.

இந்த மன வேதனை என்பது உங்களைப் போன்றவர்களுக்கு நன்றாக தெரியும். இதற்கு மேல் எந்த கருத்தையும் சொல்லுவதற்கு இல்லை" என்றார். எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க. வில் இணைய போவதாக கூறுகிறார்களே? என்று நிருபர்கள் கேட்டதற்கு மறுப்புஏதும்சொல்லாமல் வெறும் புன்னகையை மட்டுமே பதிலாக கொடுத்து, அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இந்நிலையில், அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதற்காக தலைமைச் செயலகம் வந்தடைந்தார்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட செங்கோட்டையன், எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்தார். தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவுவை சந்தித்து ராஜினாமா கடிதத்தை வழங்கினார். எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்த நிலையில், செங்கோட்டையனின் அடுத்த நகர்வு குறித்து அறிவிப்பதாக செங்கோட்டையன் தெரிவித்தார். அதிமுக எம்.எல்.ஏ.க்கள் அடுத்தடுத்து ராஜினாமா செய்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் மனோஜ் பாண்டியன் ராஜினாமா செய்த நிலையில் செங்கோட்டையன் நேற்று ராஜினாமா செய்தார்.

## நவ.29ம் தேதி தமிழ்நாட்டுக்கு ரெட் அலர்ட்..!!

தமிழ்நாட்டில் நவம்பர்.29ம் தேதி ஓரிரு இடங்களில் மிக மிக பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. 21 செ.மீ.க்கும் அதிகமாக மழை பெய்ய வாய்ப்பு என்பதால் நவம்பர்.29ம் தேதி 6 மாவட்டங்களுக்கு மிக மிக பலத்த மழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர்,மயிலாடுதுறை,தஞ்சை,நாகை,திருவாரூர் மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் விடுக்கப்பட்டது. புதுச்சேரி மற்றும் காரைக்காலில் நவ.29ம் தேதி மிக மிக பலத்த மழை பெய்யும் என்று ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது

# கவரப்பேட்டையில் மாபெரும் கல்வி கடன் முகாமில் 115 மாணவர்களுக்கு ரூ.4.31 கோடி மதிப்பீலான கடன் உதவிக்கான ஆணைகள் : அமைச்சர் சா.மு.நாசர் வழங்கினார்




திருவள்ளூர் நவ 27 : திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் கவரப்பேட்டை தனியார் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்திய மாபெரும் கல்வி கடன் முகாமில் 115 மாணவர்களுக்கு ரூ.4.31 கோடி மதிப்பிலான கடன் உதவிக்கான ஆணைகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் வழங்கி

பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மாணவ மாணவியர் உயர்கல்வி பயில வழிவகை செய்திடவும், கல்விக் கடன் பெறும் வாய்ப்புகளை எளிதாக்கும் வகையிலும் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பாக பொதுத்துறை, தனியார் துறை, கூட்டுறவு மற்றும் கிராமப்புற வங்கிகள் இணைந்து கவரைப் பேட்டையில் மாபெரும் கல்வி கடன் முகாம் நடைபெற்று வருகிறது. இந்த முகாமில் 10க்கும் மேற்பட்ட வங்கிகள் மற்றும் இசேவை மைய அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

முகாமில் கல்விக் கடன் தேவைப்படும் திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த மற்றும் வெளி மாவட்டங்களில் குடியிருந்து திருவள்ளூர் மாவட்டத்தில் பயின்று வரும் மாணவ மாணவியர் பங்கேற்று பயனடையும் வகையில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், வங்கிகளில் ஏற்கனவே கல்விக்கடன் வேண்டி விண்ணப்பித்தவர்கள் மட்டுமல்லாமல் புதிதாக கல்விக் கடன் தேவைப்படுபவர்கள் இம்முகாமில் நேரடியாக கலந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. முகாமில் சுமார் 600 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

115 மாணவ மாணவியருக்கு மொத்தம் ரூ.4.31 கோடி மதிப்பிலான கல்விக் கடன்களுக்கான ஆணைகளை நேரடியாக வழங்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 1089 கணக்குகளுக்கு ரூ.78 கோடி கல்விக் கடன் வழங்கப்பட் டுள்ளது. 2025 2026 கல்வியாண்டில், தமிழ்நாடு அரசு நிர்ணயித்த கல்விக் கடனுக்கான இலக்கு ரூ.90 கோடியில், நமது மாவட்டம் தற்போது வரை ரூ.193.00 கோடியை கல்வி கடன் எட்டியுள்ளது. உயர்கல்வி பயிலும் மாணவர்கள் தங்கள் கனவுகளை எட்டிப்புடிப்பதற்காக பெற்ற கல்வி கடன் உதவிகளை தங்கள் நினைத்த பணிகளில் சேர்ந்த பின் அக்கல்வி கடன்களை திரும்ப செலுத்த வேண்டும் என கூறினார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் (கும்மிடிப்பூண்டி), ஆ.கிருஷ்ணசாமி (பூவிருந்தவல்லி),துரை சந்திரசேகர் (பொன்னேரி), இந்தியன் வங்கி மண்டல மேலாளர் ர.சீனிவாசன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தென்னரசு, பேராசிரியர்கள், திரளான கல்லூரி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# வேலூரில் பரபரப்பு கலெக்டர் அலுவலகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி

## *போலீசார் விசாரணை

வேலூர் : நவ.27–

வேலூர், கலெக்டர் அலுவலகத்திற்கு நேற்று காலை ஒரு பெண் வந்தார். அவர் கலெக்டர் அலுவலக 'ஏ' பிளாக் போர்டிகோவில் நின்று கொண்டு திடீரென தான் எடுத்து வந்த மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றுள்ளார். அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், இதை பார்த்து உடனடியாக விரைந்து சென்று தீக்குளிப்பு முயற்சியை தடுத்து, அவரை மீட்டனர்.

இன்ஸ்பெக்டர் சீனிவாசன் தலைமையிலான போலீசார் மற்றும் கலெக்டர் அலுவலக அதிகாரிகள் நடத்திய விசாரணையில், அவர் வேலூர் கன்சால்பேட்டையை சேர்ந்த ராஜேஸ்வரி (57) என்பதும், அவரது பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் ஆபாசமாக போட்டோ, வீடியோ எடுத்து வைத்துக் கொண்டு ரூ.1 லட்சம் பணம் கேட்டு மிரட்டுவதாகவும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார். தொடர்ந்து அவரிடம் நடத்திய விசாரணை குறித்து போலீசார் கூறியதாவது:

ராஜேஸ்வரியின் பக்கத்து வீட்டைச் சேர்ந்த ஒருவர் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து ரூ.1 லட்சம் கேட்டு மிரட்டினாராம். இதுகுறித்து ஏற்கனவே வேலூர் வடக்கு போலீஸ் நிலையத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்பு ராஜேஸ்வரி புகார் தெரிவித்துள்ளார். அதன்பேரில் போலீசார் விசாரித்ததில், இது உண்மை இல்லை என தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அவரது மகனை அழைத்து விசாரித்ததில், தனது அம்மாவுக்கு சற்று மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் இதற்காக மருந்து மாத்திரைகள் எடுத்துக் கொள்வதாகவும், யாரும் மிரட்டி பணம் கேட்கவில்லை எனவும் தெரிவித்தார். இருப்பினும் இதுதொடர்பாக புகார் தெரிவிக்கப்பட்ட நபரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

ராஜேஸ்வரியை அவரது மகனுடன் அனுப்பி வைத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர். இதற்கிடையில், தீ குளிக்க முயன்ற பெண் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட நபரிடம் போலீசார் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டர் அலுவலக அதிகாரிகள் போலீசாருக்கு அறிவுறுத்தினர்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421